வெள்ளிக்கிழமை தோறும் வெளி வருவது.

செய்தித் தாளாகப் பதிவுபெற்றது

உ
சிவமயம்

# இந்து சாதனம்
# HINDU ORGAN

சைவ பரிபாலன சபை வெளியீடு

பிரதி விலை சதம் 20

ஆரம்பம்: விரோதி ஹு (1889) ஆவணிமீ 28-ம் உ. அச்சகம்: சைவப்பிரகாச அச்சியந்திரசாலை, 450. காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி: 35

புத்- அகூ] யாழ்ப்பாணம்:- பிங்கள ஹு ஆனி மீ கஎ - உ வெள்ளிக்கிழமை (1 - 7 - 1977) [இல: கஉ

## ஆன்மாக்கள் கரைசேர ஆதரவளிக்கும் திருப்பெருந்துறை

[ திரு. நா. செல்லப்பா ]

தமிழ் வேதம் வழங்கப்பட்ட இடம் திருப்பெருந்துறையாகும். வேதம் மறைபொருள் உடையதாகும், திருப்பெருந்துறையும் மறைபொருள் உடையதென நிச்சயமாகக் கூறலாம். மறைபொருள் புறப்பொருள்களிடத்தே மலர்தலில்லை' அது இதயத்திலே இயற்கையாகவே அகப்பொருளாக மலர்வதாகும். இயந்திரப் போக்கில் புறப்பொருளை மனத்தில் திணிப்பவர்களுக்கும், ஒலிப்பதிவு நாடாவைப்போல வெறும் இருமைச் சிந்தனைகளை மனதில் செயற்கையாக மனனம் செய்து பதிப்பவர்களுக்கும் இம் மறைபொருள் சிறைபெருநீர்போல உள்ளிருந்து ஊற்றெடுக்கமாட்டாது.



மணிவாசகப் பெருமான் திருப்பெருந்துறையை அடையுமுன்பு செயற்கை முறையிலேயே பிறரிடமிருந்து வேதாகமங்களை நன்கு பயின்றிருந்தார். எனினும் அவரிடம் அப்பொழுது சுயமாகவே உள்ளிருந்து மெய்ஞ்ஞானம் ஊற்றெடுக்கவில்லை என்பதை நாம் தெளிதல் நமது தியான சாதனைக்கு ஆதாரமாகும். கடவுள் மாமுனிவர் அருளிச் செய்த திருவாத

வளர்ச்சி 2-ம் பக்கம்

மகாசனக் கல்லூரி திருவியவர் நினைவு நாளில்

### கல்லூரி அதிபரின் கருத்துக்களிற் சில

அரசுக்கும் ஆசிரியர்களுக்கும்

### அரிய போதனை

உயர்ந்த சமுதாயமொன்றை உருவாக்கும் பொறுப்பு ஆசிரியர்களைச் சார்ந்துள்ளது. மருத்துவர்கள், பொறியியல் நிபுணர்கள், அரசியற் றலைவர்கள், தொழில்நுட்ப வல்லுநர்கள் முதலிய அனைவரையும் உருவாக்கும் ஆசிரியர்கள் சம்பளத்துறையிற் புறக்கணிக்கப்பட்டிருப்பது வருந்தத்தக்கது ஏனைய துறைகளைச் சார்ந்தோர் வேலை நிறுத்தங்கள் மூலமும் வேலைநிறுத்தப் பயமுறுத்தல்கள் மூலமும் தமது கோரிக்கைகளை வென்றெடுக்கின்றனர். ஆசிரிய சேவை அரசின் நிர்வாகத்தையோ, வருமானத்தையோ நேரடியாகப் பாதிக்காத காரணத்தால் அரசுகள் ஆசிரியர்களின் கோரிக்கையைப் புறக்கணித்து வந்துள்ளன. எனினும் அண்மைக்காலத்தில் ஆசிரியர்களு லேலைநிறுத்தம், சட்டப்படி வேலைசெய்தல் ஆகிய நேரடி நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றனர். ஒரு சமுதாயத்தையே உருவாக்கும் சிரிய பொறுப்பு ஆசிரியர்களுக்குண்டு. இதனை ஆசிரியர்களாகிய நாம மறந்துவிடக்கூடாது. கடமை உணர்வோடு எல்லா ஆசிரியர்களும் தம்பணியை ஆற்றவேண்டும்; மாணவர்களுடைய வருங்காலத்தைப் பாதிக்கக்கூடிய எந்தச் செயலிலும் ஈடுபடக்கூடாது. அதே சமயத்தில் அரசும் அவர்கள் கோரிக்கைகளை நிறைவேற்றி அவர்களின் முழுத்திறமையையும் பெற முன் வரவேண்டும். இப்பிரச்சினை அமைதியற்றிருக்கும் மாணவர் உலகத்தில் மேலும் அமைதியின்மையை வளர்க்கும் எனவே இந்நிலை உருவாகாது தடுக்க வேண்டியது அரசின் தலையாய பொறுப்பாகும்.

உ

### இந்துசாதன நேயர்களுக்கு எமது வேண்டுகோள்

ஈழத்தில் மிகப் பழைய சைவ செய்தித்தாளாக விளங்கி எண்பத்தொன்பது ஆண்டுகளாக இயங்கும் இந்துசாதனத்தின் ஆதரவாளர்களுக்கு எமது நன்றி கூறும் அதே வேளையில் எங்கள் சாதனத்தின் பண நிலையைத் திருப்திகரமாக வைப்பதும் அவர்களின் சமயக் கடமை என்று ஞாபகப்படுத்துகின்றோம்:

ஆகவே இந்துசாதனம் நெறியாக விளங்கப் பழைய நிலுவைகள் முற்றாகப் பெறவேண்டியது அவசியமாகின்றது.

எனவே பத்திரிகை பெற்று ஆதரவளிக்கும் அன்பர்கள் அனைவரையும் பத்திரிகைக்குரிய சந்தாப் பணத்தை உரிய காலத்தில் முற்றாக அனுப்பி வைக்கும் வண்ணம் தயவாய் வேண்டுகின்றோம்.

1-7-1977. — அதிபர்.

## வேதங்களில் உருவ வழிபாடு வெளிப்படைக் கூற்று

### காசிவாசி செந்திநாதையர் கருத்துக்கள் காட்டுகின்றன

[ திரு. மு. வைத்தியலிங்கம் ]
( சிவகௌரி ஆச்சிரமம், திருக்கேதீச்சரம் )

1977 — 5-ஆம் மாதம் 16-ஆம் திகதி திங்கட்கிழமை ஓர் பத்திரிகையில் வெளிவந்த ஓர் ஆராய்ச்சிக்கட்டுரையில் வேதங்களில் உருவ வழிபாடு கூறப்படவில்லை என்று ஆராயப்பட்டுள்ளது. ஆராய்ச்சியாளர் கூற்று வருமாறு:- "வேதங்களில உருவ வழிபாடு எவ்விடத்தும் கூறப்படாமையால்" என்றும் 'நால வேதங்களில் குறிக்கப்படாத உருவ வழிபாடும்" என்றும்

இக் கருத்துக்கள் பெரும்பாலும் மேல் நாட்டவர்களும் அவர்கள் வழிவந்த சில நபமவர்களும வேதங்களைப் பற்றிக் கூறிய கொள்கைகளாகும். ஒரு காலத்தில் இவைகளுக்குப்பெரு மதிப்பிருந்தன. ஏனெனில் மேல் நாட்டவர்கள் எங்களை ஆள்பவராயும் நாங்கள் ஆளப்பட்டவர்களாயும் இருந்தோம் அவர்கள் சிந்தித்துக்கொடுத்தவைகளை அப்படியே ஏற்று 'ஆமா' சொன்னோம், இருந்தும் ஒரு சிலர் துணிவோடு எதிர்த்தும் உள்ளார்கள் இச்சிறு தொகையினருள் கலாயோகி ஆனந்தக்குமாரசுவாமியும், காசிவாசி செந்திநாதையரும இருவர்,

கலாயோகி ஆனந்தக்குமார சுவாமி கூறுவதாவது:-

"ஆனாலும் இந்து சமயத்துக்குரிய பழைய புதிய சாஸ்திரங்களை ஐரோப்பிய பண்டிதர்கள் ஒரு நூற்றாண்டுக்கு மேல் ஆராய்ந்துள்ளார்கள், அவர்களும் அவர்கள் வழிவந்த சுதேசிகளும் கூறிய அத்தனை கூற்றுக்களையும் பூரணமாக மறுத்தாற்றான் இந்து மதத்தின் உண்மைத்தன்மையை விளக்கக் கூடியதாய் இருக்கு"

( பார், இந்துமதமும் புத்தமதமும் முகவுரை )

காசிவாசி செந்திநாதையர் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் அவர்களின் மாணாக்கர். தமிழ், சமஸ்கிருதம், ஆங்கிலம் ஆகிய மூன்று மொழிகளையும் நன்கு கற்றவர்- பன்னிரண்டு வருடங்களுக்கு மேல் காசியில் வசித்து, வேத சிவாகமங்களை நன்கு முறைப்படி கற்றவர். சைவ வேதாந்தம் தேவாரம் வேதசாரம். பிரம சூத்திரத்துக்கு நீலகண்டர் செய்த பாஷிய மொழிபெயர்ப்பு, சிவஞான போத வசனாலங்கார தீபம், கந்தபுராண நவநீதம் முதலிய நூல்களின் ஆசிரியர். வேதங்களைப்பற்றிப்பேசுவதற்கு எல்லா வகையாலும் அதிகாரம் உள்ளவர், அவர் காலத்தில் 'வேதங்களில் உருவ வழிபாடு கூறப்படவில்லை' என்னும் கொள்கை தோன்றி நிலவத் தொடங்

( வளர்ச்சி 3-ஆம் பக்கம் )

## மின்விளக்கு விட்டுவிட்டு அணையும் விபரீதம்

### சட்டப்படி இயங்கும் திட்டத்திற் சிக்கியிருக்கும் பொதுசனம்

கேட்பாரில்லையா? வேட்பாளர்கள் என்ன செய்கின்றனர்?

சமயம் பார்த்துச் சறுக்க வைக்கும் நாடகம் இப்பொழுது நாடெங்கும் நடக்கிறது.

போக்குவரத்து, சுகாதாரப் பகுதி வைத்தியத்துறை இவை யெல்லாம் அடிக்கடி பாதிக்கப்படுவதை யடுத்து இப்பொழுது மின் ஒளியை மழுங்க வைக்கும் திட்டமும் வெளிப்பட்டிருக்கிறது:

தேர்தற் காலத்திலே கட்சி மோதல் ஊரவர்களுக்குப் பாதிக்குமென்றாலிந்தத் தேர்தல்தான் ஏன் நிகழ வேண்டும்? மறுபடி மின்னுகின்றதாம்; ஆனால் இது உறுதியா?

## சைவ சமயத்தவர்களின் செய்திப் பத்திரிகை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருச்சிற்றம்பலம்
வாழ்க அந்தணர் வானவரானினம் வீழ்க தண்புனல்
வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல் லாமர னாமமே சூழ்க வையகமுந் துயர் தீர்கவே,
திருச்சிற்றம்பலம்

# இந்து சாதனம்

பிங்கள ஞுல ஆனி மீ௳ கஎ - உ வெள்ளி

## வேலை நிறுத்தம் ஒரு நிரந்தர வேலையாய்விட்டதா?

போது நன்மைக்காகப் புலம்பித் திரிகின்ற அரசியல் வாதிகளே, பொதுசனத்துக்காகப் பதை பதைக்கின்ற சமூக சேவையாளர்களே! இன்று இந்த நாடிருக்கும் நிலைமை எண்ணிப் பார்க்கிறீர்களா? கொந்தளிப்பாலும் கும்மாளத்தாலும் வாழ்க்கையென்ற கப்பல் அங்கும் இங்குமாக அடி அலைந்து குலைந்து போகின்றதை நீங்கள் குறிக்கவில்லையா?

பல திறப்பட்ட பொது நல சேவையாகவுள்ளது ஆட்சி பரிபாலனம். வைத்தியம், சுகாதாரம், போக்குவரத்து, உணவு உடை உற்பத்தி விநியோகம் அன்றைக்கன்று தேவையான அத்தியாவசியப் பொருட்கள் என்ற வகையிலே இவையெல்லாம் நிருவகிக்கப்படும் ஒழுங்குகள் உண்டல்லவா? இவற்றை இயக்குகின்றவர்கள் நாளுக்கு ஒவ்வொரு பகுதியாக வேலை நிறுத்தம் அல்லது சாட்டுக்கு வேலை செய்தல் என்ற உபாயங்களை உபயோகித்துப் பொதுசனத்தின் வாழ்க்கை நிலைமையைப் பாழாக்குவது நீதியா? நியாயமா? நெறியா? பொது மக்களின் தலை விதி இப்படியிருக்குமானால் இதற்கு யார்தான் வழி காணக்கூடும்? நோயுறறவர் என்றால் யாருமே இரங்குவார்கள். ஆனால் இந்நாட்டில் இந்நாட்களில் அப்படியல்ல; பிணி ஒரு பக்கம் வேறு இடரைப் புகுத்தும் விபரீதம் இன்னொரு பக்கம்; எரிபொருள் எப்பொழுது கிடைக்கும் என்பது சோதிடருக்கும் அப்பாற்பட்டது. மின் ஒளி என்று மின்னுதின்றுவிடும் எனபது ஆராய்ச்சிக்குரியது.

இம்மட்டா! எல்லாம் சரியென்றால் வங்கியாவது பின் தங்க முற்படும்,

யார் யாரைப் பழி வாங்குகிறார்கள்?

சிந்தியுங்கள் - சிவநெறியிற் சென்று.

## ஆன்மாக்கள் கரை சேர

1-ஆம் பக்கத்து வளர்ச்சி

ஊரடிகள் புராணத்திலே திருப்பெருந்துறைச் சருக்கம் இயற்கை வளம் நிறைந்த மெய்ஞ்ஞான ஊற்றாக மிளிர்கிறது. நவீன சமயக் கல்வித் துறையிலே செயற்கை முறையிற் திணிக்கப்படும் சமய பாடங்கள் திருப்பெருந்துறையில் அமைக்கப்படவில்லை.

புறப்பொருளில் கப்பல்கள் வந்து கரை சேரும் இடத்தைத் துறையென நாம் வழங்குகிறோம். திருப்பெருந்துறை புறப் பொருளால் அவ்வளவு விசேடம் பெறவில்லை. ஆன்மாக்கள் கரை சேர்ந்து கடைத்தேறும் இடம் என்பதனாலேயே திருப்பெருந்துறை பொலிவுறுகிறது. இதனை மிகவும் அழகாக,

"வெம்பிறவி வேலைதனில் வீழ்பவர்க ளெல்லா
நம்புசிவ நாமமெனு நற்புணை பிடித்தா
லெம்பர னருட்கரையி லேறுதுறை யாமா
லம்புவி மொழிந்துள பெருந்துறை யதன்பேர்"

எனக் கடவுள் மாமுனிவர் விளக்குகிறார். ஸ்ரீ பஞ்சாட்சரத்தைத் தெப்பமாகப் பிடித்துக்கொண்டு, பிறவிப் பெருங்கடலை நீந்தித் திருவருட் கரையில் ஏறும் துறையே திருப்பெருந்துறையென்பதன் பொருள் என ஆணித்தரமாக அடித்துக் கூறுகிறார்.

தாம் பெற்ற சுயானுபூதியின் பேருக மணிவாசகர் "சிறை பெறு நீர்போற் சிந்தைவாய்ப் பாயும் திருப் பெருந்துறை உறை சிவனே ... போற்றுகிறார், சிவ ஞானம் இயற்கையாகவே இத

## தேமதுரத் தமிழோசை இங்கிலாந்தில் எழ நிகழும் திருப்பணி

[ வட்டூர் திரு சு இரத்தினம் இளைப்பாறிய ஆசிரியர் ]

[ சித்தன்கேணி - வட்டுக்கிழக்கைச் சார்ந்த இளைப்பாறிய ஆசிரியர் திரு. சு. இரத்தினம் அவர்கள் சென்ற ஆறு மாதங்களுக்கு மேலாக இலண்டன் மாநகரில் தங்கியிருந்த போது தமிழ் சைவம் எவ்வாறு அங்கு வளர்ச்சியடைகின்றது என்பதை நேர்முகமாக அறிந்த — ஆங்கு நடைபெற்ற வைபவங்களில் கலந்துகொண்ட இவர் இந்துசாதன வாசகர்களுக்கென எழுதிய கட்டுரை இதுவாகும். இலண்டன் மாநகரில் முருகன் திருக்கோயில் ஒன்று விரைவில் தவமாக அமைய இருப்பதையும் இத் திருப்பணிபற்றி ஆங்குள்ளோர் மத்தியில் இருக்கும் சைவ எழுச்சியையும் உளமாரப் பாராட்டும் திரு. இரத்தினம் அவர்கள் உங்களை ஆங்கு அழைக்கின்றார்கள். இதோ படியுங்கள் ) ப ர், ]

( முன் வளர்ச்சி — 2 )

திரு. சபாபதிப்பிள்ளையவர்களின் தலைமையில் வழிபாடும். மன்றமும் வளர்பிறைபோல வளரவே சங்கைக்குரிய அடிகளார் தர்மபுர ஆதின மடாதிபதி ஸ்ரீலஸ்ரீ கயிலை சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த சுவாமிகள் ஆசி கிடைக்கப்பெற்று மன்றத்துப் போஷகராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள். தாய் நாட்டைத் தழுவிய முறையிலே சமயச்சடங்குகள்யாவும் நடைபெறவும். வளர்ந்தோரும், பிள்ளைகளும் இந்து சமயாசாரமுறையில் வளரவேண்டு மென்பதே மன்றத்தின் குறிக்கோளாக இருக்கிறது. நீண்ட காலத்திட்டத்தில் ஓராலயமமைக்க விரும்பியும், ஆலயத்தை அமைக்கவும் நடாத்தவும் போதிய ஆதரவாளர்களின் ஒத்து

வளர்ச்சி 3- ஆம் பக்கம்

யத்தில் ஊற்றெடுத்துப் பாயும் ஓர் உத்தம நிலைமையே இங்கு காண்கிறோம். திருப்பெருந் துறையில் உறையும் சிவன் நமது சிந்தையில் இயற்கையாகவே பாய்தல் வேண்டும் எனும் பாடத்தையே திருவாதவூரடிகள் நமக்குப் போதிக்கிறார். இப்போதனை நமது சைவ மாணவர்களிடையே இயற்கையான சாதனையாக மலரும் நாள் வரும்போதுதான் நமது சமுதாயத்திலே சிவ மணம் கமழும், மெய்யுணர்தல் மிளிரும்

சிவஞான போதமாகிய மெய்யுணர்தல் நமது சிந்தையிற் பாய்தல் வேண்டுமாயின், இதய ஸ்தாயியாகிய இறைவனை நாம் முதலில் நமது இதயமாகிய திருப்பெருந் துறையில் பிரதிஷ்டை செய்து கொள்ளுதல் வேண்டும். இதற்கு இன்றியமையாத சாதனையாயுள்ளது சிவத்தியானமேயாகும். சிவதியானம் செய்வதற்கு முன்பு நாம் இதயசுத்தி செய்து கொள்ளுதல் அவசியமாகும். இதனை ஓர் அற்புதமான நிவிர்த்திக் கலையெனச் சிவஞானபோதம் தெளிவுறுத்துகிறது. இதனைக் கடவுள் மாமுனிவர் அத்துவாக்களை அகற்றுதல் என அழுத்தமாகத் திருத்தமாகக் கூறுகிறார்.

'மந்திரம் பதங்கள் வண்ணம் புவனங்கள் தத்துவங்
களைந்து நற்கலைகளென்னு மறுவகை யகற்றி''

என்பதே அவர்கட்கும் சாதன மார்க்கமாகும்.

இங்கே நாம் காண்பது மனவாசகங்கடந்த புனிதமான தியாக சாதனையையே யாகும். இதனை இன்னும் திருத்தமாக, 'நண்பகல் கங்குல் காணார்; ஞான நல்லறிவே காணபர்'' என அவர்மேலும் விளக்குதல் நமது அவதானத்துக்குரியதாகும். இராப்பகலற்ற இடத்தே இருத்தல்தான நாம் திருப் பெருந்துறையின் உண்மையான தரிசனம் பெறுதற்கு வேண்டிய சாதனையாகும். இதுவே அறிவு அறியாமை இரண்டும் அகற்றிச் செறிவறிவாய் நிற்கும் சிவத்தை நாம் நமது இதயத்தில் பிரகாசிக்கச் செய்யும் தூயதியான சாதனையாகும் இதனை மாணிக்கவாசகர் இதயமாகிய திருப்பெருந்துறையில் சரிவரப் பெற்றார்.

இதயம் என நாம் இங்கே குறிப்பிடுவது உடற் கூறாகிய இரத்தாசயத்தையன்று, மூளையையுமன்று, மனத்தையுமன்று, இது ஒரு மறைபொருளாக உள்ள உளவியல் சம்பந்தமான இதயமாகும். (psychological h·art) இதனை இரமணமகரிஷிகள் மேல்நாட்டு விஞ்ஞானிகளுக்கு ஐயந்திரிபற விளக்கியுள்ளார் நாம் இதைத் திருப்பெருந் துறையாகக் கொள்வதிற் குறையில்லை இருமையாகிய எண்ணங்களற்று சமநோக்குடன் ஒருமைப்பாடு எய்துதற்கு நாம் புரியவேண்டிய சாதனை சிவதியானமேயாகும். மணிவாசகர் குருபூசையின் போது நாம் உண்மையான திருப்பெருந்துறையில் இதயசுத்தியுடன் கூடிய சிவதரிசனம் பெற்றுய்வோமாக! இதற்கு அனுசரணையாக இம்மாத முடிவில் ஒரு ... ஆசிரியரால் இலவசமாக வெளி ... எதிர்பார்க்கவும்.

## வேடம் பல — விஷயம் ஒன்று என்றிருக்கட்டும்

( முன் வளர்ச்சி -- 2 )

தென்னிந்திய தமிழகத்தைப் போலல்லாது ஈழத் தமிழகத்திற் கட்சிகள் ஒரு சிலவே. ஆனல் அங்கத்தவர்கள் இடம் மாறும் நிலைமை இங்கும் இருக்கிறது.

இலக்கு ஒன்றாக விருந்தாலும் எடுக்கும் முறைகள் பலவாறாக உள்ளன. பழைய முகங்கள் புதிய இடங்களிலும் புதிய முகங்கள் பல இடங்களிலும் ஆகத் தேர்தல் ஆரவாரம் நிகழ்கின்றது.

ஆனல் இத் தேர்தலிலே தான் சிங்களப் பெரும்பான்மைக் கட்சிகள் மூன்று கிழக்கிலே அநேக இடங்களிலே அபேட்சகர்களை நிறுத்தியிருக்கின்றன, வடக்கில ஒரு சில இடங்களிலேயே அக்கட்சிகள் தேர்தலுக்கு நிற்கின்றன.

யார் எங்கே நின்றாலும் யாமெல்லோரும் நாடுவது தமிழ் பேசும் இனத்தின் பிறப்புரிமைகளையே,

எப்பொருள் யார் யார்
வாய்க் கேட்பினும்
அப் பொருள்
மெய்ப் பொருள்
காண்பதறிவு".

## இவர்களை அனுப்பாதீர்!



பக்தர்: "நாட்டின் கலாசாரத்தை அடியோடு குழி தோண்டிப் புதைத்துவிட்டு, 'மது' அருந்திக் கொணடு, கூத்தடிக்கும் பேர்வழிகளைப் பேரவைப் பிரதிநிதிகளாகத் தெரிவுசெய்து அனுப்பாதீர்கள்'' என அ, இ. பௌத்த சம்மேளனத் தலைவர் திரு. ஆர். எஸ். எஸ் குணவர்த்தன நாட்டு மக்களிடம்வேண்டியிருக்கிறார்''?

சித்தர்: ''நல்ல கோரிக்கையிங்க, யாருமே வரவேற்பாங்க! 'குடிக்கிற வாக்காளங்களே இல்லாத ஒரு நாட்டிலே' அப்பிடி வேட்பாளர்கள் இருக்க முடியுமா? குடிகாரர் வேட்பாளராயோ — வாக்காளராயோ இல்லாதிருக்கத்தக்க சட்டம்ஒன்று வரவேணுமா?

— "நாயன்மார்- நாதன்".

'கற்க கசடறக் கற்பவை
கற்றபின்
நிற்க வதற்குத் தக'

## திருமதி. சீ. தங்கமுத்து அம்மையார் அவர்கள்

திரு. சி, சீவரத்தினம் (பரீட்சைக் காரியதரிசி; சைவபரிபாலன சபை) அவர்களின் தாயார் திருமதி சீ. தங்கமுத்து சிதம்பரப்பிள்ளை 30-6-77 வியாழக்கிழமை இறையடி சேர்ந்தார்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தேமதுரத் தமிழோசை

(2 ஆம் பக்கத்து வளர்ச்சி)

மைப்பு கிடைக்கும் வரை. கட்டிட நிதிசேகரித்தல் பின் போடப்பட்டு இன்று உச்சநிலை அடைந்தமை மகிழ்ச்சிக்குரியதே. 4. 9. 76. இல் பிரித்தானியா இந்து மாமன்றமானது பத்தாவது ஆண்டுவிழாவைக் கொண்டாடியது பிரதம விருந்தினராக கலந்து கொண்ட சங்கைக்குரிய இலண்டன் மேற்றன் பகுதி மேயர் உயர்திரு மோன் வாற்கன் அவர்கள் தமது பேருரையில் திராவிட மக்களும் தமது பிள்ளைகளுடன் பாரம்பரிய முறையில் மதாசாரத்தையும் ஒழுக்கத்தையும் பேணிக்காக்க வேண்டுமென்றும் அதற்கு வேண்டும் புதிய ஆலயம். விரைவில் அமையவும். புதிய ஆலயத்தைத் தரிசிக்க ஆவலுடையவரெனவும் மகிழ்ச்சியோடு கூடிய ஆசியுரையை வழங்கினர்கள்.

நிற்க, ஆலயமமைத்தற்கு வேண்டும் நிலம் வாங்குதற்குரிய பணத்தின் கணிசமானபகுதி மன்றப்பரிபாலன சபையிடம் இருப்பதால். நிலம் வாங்கும் விடயத்தில் மன்றம் கண்ணும். கருத்துமாக இடம் தேடுகிறது தற்போது 125 க்கு மேற்பட்ட அங்கத்தவர்கள் தமது நன்கொடையை மாத வீதம் செலுத்திவருகிறார்கள். இதைவிட படக்காட்சி வைத்தும். வெள்ளிக்கிழமைகளில் வழிபாட்டு நிலயத்தில் சேரும் பணமும். பிற சமய கூடங்களின் அன்பளிப்பாக கிடைக்கும் பணமும். ஆலயவழிபாட்டிடத்தில். வித்தியாரம்பம், பிறந்த தினவைபவங்கள். பிள்ளைகளைக் கோயிலிற் பால் பருக்குதல் முதலிய வைபவங்களில் சேரும் பணமும் காணும் நிதியைவளர்த்து வருகின்றன. நிலம்வாங்கப் பெற்றதும் ஆலயத்தை அமைத்துக் கொடுக்கும் பணியை திருப்பதி. திருமலை தேவஸ்தானம் ஏற்றுக் கொண்டமை மன்றத்துக்கு அளவிலாத உற்சாகத்தையும் மகிழ்ச்சியையும் அளிக்கிறது.

இன்று வெள்ளிக்கிழமை தோறும் வெம்பிள்ரன் என்னும் இடத்தில் வாடகைக்கு ஓரிடத்தைப் பெற்று வழிபாடு, பூசை, பஜனை கிரமமாக நடைபெறுகிறது, முருகனுக்குரிய கார்த்திகைத் திருநாள், கந்தஷஷ்டி, திருவெம்பாவை, தைப்பொங்கல், வருடப்பிறப்பு, என்பவற்றோடு, தீபாவளி, சதுர்த்தி, நவராத்திரி, சிவராத்திரி இன்னும் பல பண்டிகைகள் சிறப்பாக நடைபெறுகின்றன. இங்கு, சிறப்பாக முருகவழிபாடே நடைபெறுகிறது இதற்குரிய விக்கிரகம், திருச்செந்தூரிலிருந்து வார்ப்பிக்கப் பெற்று தலைவர் அவர்களால் மன்றத்துக்கு அன்பளிப்புச் செய்யப்பட்டது. இவ்விக்கிரகத்தை இந்தியாவிலிருந்து இங்கிலாந்து எடுத்துச் செல்வதற்கு வேண்டும் அனுமதி பெறுதற்கு குன்றக்குடி அடிகளாரின் உதவி கிடைத்ததாக மன்ற அறிக்கை கூறுகிறது வழிபாடு பூசை என்பன தமிழிலேயே நடைபெறுகின்றன. விசேட வைபவங்களில் சைவப் பெரியார்களின் சொற்பொழிவுகள், பாலர்களின் பேச்சுக்களும் இடம் பெறுவதுண்டு.

திரளாக ஆண்கள், பெண்கள் சிறுவர், சிறுமியர் இலண்டனிலிருந்து 15 மைல் சுற்றளவிலுள்ளோர் வழிபாட்டில் கலந்து கொள்வர். வெள்ளிக்கிழமைகளில் சராசரி 150 பேர் சமுகமளிப்பர், சிறப்புவைபவங்களில் இத்தொகை அதிகரிக்கும், இம்முறை ஆலயத்திலேயே நடைபெற்றமை கண் கொள்ளாக் காட்சியாக இருந்தது வழிபாடு முடிந்ததும் உபயகாரர் தத்தம் இல்லங்களிலேயே தயாரித்து வரும் பிரசாதம், தேனீர், குளிர்பானம் என்பன சிநேகோஷ்ண நிலைக்குதக அளிக்கப்படும, இதைவிட முருக வழிபாடு செய்யும் பிறநிலையங்களும் உள. அவர்களும ஆலயமமைக்கும பணியில் தீவிரமாக உழைத்து வருகின்றனர்.

நிற்க,

"யாமறிந்த மொழிகளிலே தமிழ் மொழி போல் இனிதாவதெங்கும் காணோம். பாமரராய் விலங்குகளாய் உலகனைத்தும் இகழ்ச்சி சொல்லப் பான்மை கெட்டு நாமமது தமிழரெனக் கொண்டிங்கு வாழ்ந்திடுதல் நன்றோ சொல்வீர் தேமதுரத் தமிழோசை உலகமெலாம் பரவும் வகை செய்தல் வேண்டும்."

என்னும் பொன் மொழிக்கியைய இங்கிலாந்திலுள்ள 'ஈழம் தமிழ்ச் சங்கமானது இங்கிலாந்து வாழ் தமிழரின் ஒற்றுமை, நல் வாழ்வு என்பவற்றுக்கு பணிபுரிப மாணவர்க்கு ஆலோசனை கூறுதல், அவர்கள் பிரச்சினைக்கு தீர்வு காணல் ஈழத்தமிழர் விவகாரங்களிலும் தமது பணியை செய்தே வருகின்றனர்.

---

"வேத மோதும் வேதியர்க்கோர் மழை
நீதி மன்னர் நெறியினுக்கோர் மழை
மாதர் கற்புடை மங்கையர்க்கோர் மழை
மாதம் மூன்று மழையெனப் பெய்யுமே."

## வேளையும் கோளும் பொருந்த வியாழனன்று அண்ணா தி. மு. க. அதிபர் அமைச்சரவை நிறுவினர்

வெள்ளித் திரை வீரர்களின் வெற்றி போலத் தமிழகத்திலே புதிய அமைச்சர் அவை நேற்று சுப தின சுப வேளையிலே பதவியேற்றிருக்கின்றது.

திரு. எம். ஜீ. ஆர். இராமச்சந்திரன் முதல் அமைச்சரானர்.

ஈரேழு (14) பேர்கொண்ட இந்த அவை தேவைக்கேற்ப விரியும் என்ற கருத்து நிலவுகின்றது.

இந்திய சனாதிபதித் தேர்தல் 1977 8-ஆம் மாதம் 6-ம் நாள் நடைபெறவிருக்கின்ற செய்தி மறுபடியும் கட்சி ஆரவாரத்தை ஊக்குவிக்கின்றது.

திரு. சஞ்சீவரெட்டியா திரு. ஜெகஜீவன்ராமாவா அல்லது; திருமதி, விஜயலட்சுமியா என்ற நிலையில் இருக்கிறது இந்தத் தேர்தல்.

---

## ஈட்டுவழக்கில் விற்பனவுக்கான விளம்பரம்

பருத்தித்துறை மாவட்ட நீதிமன்றத்தில்
வழ. இல. ஈடு 13279.

தொண்டைமானுறு பொன்னுச்சாமி செல்லத்துரை கைம்பெண் தில்லைமாதேவிப்பிள்ளை —வாதி,

எதிராக

1. வல்வெட்டித்துறை நல்லபிள்ளை நடராசாவும்
2. பெண் வளமணிதேவியும் —பிரதிவாதிகள்

மேற்குறித்வ இலக்க வழக்கில் தீர்த்த தீர்வைப்படியும் குறித்த கோட்டால் எனக்குக்கிடைத்த விற்பனவுக்காணை அதிகாரப்படியும் இதன் கீழ் விபரிக்கப்படுமாதனம் 1977ம் ஆண்டு ஆவணி மாதம் 4ம் திகதி (4-8-77) வியாழக்கிழமை முற்பகல் 10-30 மணி தொடக்கம் குறித்த காணியிடமாக விருந்து என்னால் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

### ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம்டிஸ்திறிக் வடமராட்சிப் பகுதி உடுப்பிட்டிக் கோயிற் பற்று வல்வெட்டித்துறை பொலிகண்டியிறை கட்டைதெணி" 9, 5/8 இதற்கு 1968—ம்ஆ ஆனி மீ 17—ந் திகதி உத்தரவு பெற்ற அளவையாளர் சசிவராமலிங்கம் அவர்களால் 6A இலக்கத்தில் அளந்து விந்தாரிக்கப்பட்டதும் பருத்தித்துறை மாவட்ட நீதிமன்றத்தின் 8778ம் இலக்கப்பிரிவிடல் வழக்கின் கடைசித் தீர்வையோடணைக்கப் பட்டதுமான அளவைப்படத்தின்படி நில ப. 10 குளி 2, 16/66 இதில் குறித்த அளவைப்படத்தில் கண்டிருக்கின்ற 3—ம் இலக்கத்துண்டுக்கு நில ப 10 குளி 9, 10/32 இதற்கு எல்லை கிழக்கு மரியதாசனுக்கும் மறுபேருக்குமுரிய குறித்த அளவைப் படத்தில் 4ம் இலக்கதுண்டும் இந்திரலிங்கம் பெண் சரோஜினிதேவிக்கும் மறுபேருக்குமுரிய குறிதத படத்தின் 2—ம் இலககதுண்டு, மேற்கு குறித்த படத்தின் 9—ம் இலக்கத்துண்டாகிய ஒழுங்கை, தெற்கு குறித்த படத்தின் 9—ம் இலக்கத்துண்டாகிய ஒழுங்கையும் மரியதாசனுக்கும் மறுபேருக்குமுரிய குறித்த படத்தின் 4—ம் இலக்கத்துண்டும் இவ்வெல்லைக்குட்பட்ட நிலம் தென்னைகள் மற்று மடங்கலும்.

| | | |
|---|---|---|
| துரட்சித் தொகை | ரூபா 6400 | 00 |
| இதில் ரூபா 4250/-க்கு 29-9-1975 தொடக்கம் 21-7-1976 வரை 15 வீத வட்டி | 531 | 25 |
| | 6931 | 25 |
| ரூபா 6931-25 க்கு 22-7-1976 தொடக்ம் 22-3-1977 வரை 9 வீத வட்டி | 415 | 86 |
| ஆக மொத்தம் ரூபா | 7347 | 11 |
| 4-8-77 வரை 9 வீத வட்டி | — | — |

நீதி மன்றத்தால் ஏற்கப்பட்ட விலை மதிப்புத தொகை ரூபா 12,000/-

'உமாபதி"
நெல்லண்டை ரோட்,
தும்பளை,
பருத்தித்துறை,
27-6-77

30 27 6

**R. S. இராமநாதன் J. P**
நீதிமன்ற விற்பனவு ஆணையாளர்
விலைமதிப்பாளர், ஏலவிற்பனையாளர்.
Commissioner of Sales, Valuer and Auctoneer.

---

## திருத்தருமை ஆதீனத்தில் குருபூசைப் பெருவிழா

[எமது சிதம்பரம் சிறப்பு நிருபர் திரு. மா. பாலசுப்பிரமணியன்]

(முன் வளர்ச்சி — 3)

ஸ்ரீ. ல. ஸ்ரீ. குருமகாசந்நிதானம் அவர்கள் குருபூஜையின் நினைவு மலராக "திருவாசகம்" வெளியிட்டுசெய்தார்கள். தாபகரின் திருக்கோயிலான ஸ்ரீ ஞானபுரீசுவரர் கோயிலுக்கு பக்தர்கள் புடைசூழ எழுந்தருளி தருமூர்த்த வழிபாடு செய்து கொண்டார்கள். அருளாட்சியிலுள்ள 27 சிவாலயங்களிலிருந்தும் சிவாசாரியார்கள் வரு[illegible] கிறார்கள். மாகேசுரபூசையுடன் அன்னதானமும் நடைபெற்றது,

ஸ்ரீ. ல. ஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் மாலை காவிரிக்கு எழுந்தருளி திரு மஞ்சனம் செய்துகொண்டு வெள்ளி சவாரி சிவிகையில் எழுந்தருளி பக்தகோடிகள் புடைசூழ குருமூர்த்திங்களில் வழிபாடுகள் நடத்திக்கொண்டு ஆதீனத்திற்கு வருகைபுரிந்து ஸ்ரீ சொக்கநாத பெருமான் சந்நிதியில் "திருமெஞ்ஞானம்" (பாலில்

## வேதங்களில் உரு

1-ம் பக்கத்து வளர்ச்சி

கியது. வேதங்களில் இருந்து உதாரணங்கள் எடுத்துக் காட்டி மறுத்துள்ளார் அதில் ஒரு பகுதி வருமாறு: –

சம் வற் சர (கால) ரூபியாகிய உமது பிரதிமையை (விக்கிரகத்தை) செய்து (அஞ்ஞான) இருட்டறையில் உம்மை உபாசிக்கிறுன் (அங்ஙனம் உபாசிப்பவன்) வலிமையுள்ள புத்திரனையும் பூரண ஆயுளையும் அடைகிறுன்" என்று யசுர் வேதத்து 5-ம் கண்டத்து 7-ம் பிரசினத்து 2-ம் அநுவாகத்திற் சொல்லப்படுவதாலும்,

"ஈண்டு கூறப்படுமாறு விக்கிரகங்களுடைய செய்கையினால்' உலகத்துக்குக் கெடுதி உண்டாய என்பதை உணர்த்துமிடத்து. தேவாலயங்கள் நடுங்குகின்றன. தேவதா வடிவமாகிய பிரதிமைகள் சிரிக்கின்றன"....... என்று சாமவேதத்து 26-ம் பிராமணத்து 5-ம் பிர பாட்கத்து 10-ம் கண்டத்திற் கூறப்படலானும்,

"(சுவாமி) வாரும் (இந்தக்) கற் பிரதிமையில் நிற்பீராக, உமது சரீரம் கல்விக்கிரகமாய் இருப்பதாக" என்று அதர்வ வேதத்து 1-ம் கண்டத்து 2-ம் கற்பத்து 3-ம் துவனியிற் காணப்படலானும், யசுர் வேத சாம வேத அதர்வண வேதங்களில் மூர்த்திகள் விதிக்கப் பட்டனவாய், பிரதிஷ்டை செய்யப்பட்டனவாய் வழிபட்டனவாய் அறியப்படுகின்றது".

இருக்குவேதத்தைப்பொறுத்தளவில் இந்தியப் புதைபொருள் இலாகா, துணைமாபெரும் இயக்குநராய் இருந்த திரு. பத்மபூஷண் T. N. இராமச்சந்திரன் அவர்கள் கூறுவதாவது!—

"வேத இலக்கியத்தில் கோவில்களைப்பற்றிய குறிப்புகள் உண்டு; உதாரணமாக (1) இருக்கு வேதம் V, 62, 6-7.

"மித்திர-வருண இருவீர்களே! ஒற்றுமையாக இந்த ஆயிரம் தூண் உள்ள மாளிகையில் அமர்வீர்களாக!"

(2) இ. வே, VIII 88.5.

உணவு அளிக்கும் வருண! ஆயிரம் கதவுகள் உள்ள உமது பரந்த மாளிகையை நான் அடையலாமா?"

(3) இ. வே. II 41 5,

ஓ! மித்திர-வருண! இருவரும் அரசர்கள்! ஆயிரம் தூண்களும் நிலைத்த அடித்தளமும் உள்ள இக்கட்டிடத்தில். வணக்கத்துக்குரிய மன்றத்தில் இருக்கிறீர்கள்"

"சரித்திர காலத்தில் இந்தியாவில் உள்ள கோவில்கள் போல் வேதகாலப் பண்பாட்டிலும் கோவில்கள் இருந்திருக்கின்றன என்பதற்கு இவைகள் போதுமான சான்றுகும்; வேதகால இந்தியாவில் வேதப்பண்பாட்டில் உருவ வழிபாடும் கோவில்களும் இருந்திருக்கின்றன என்பதை மறுப்பவர்கள் இருதரத்தினர், ஒருவர் யாகக் கிரியைகளும் ஆகமக் கோயில் வழிபாட்டுக் கிரியைகளும் எவ்வளவுக்கு ஒன்றோடொன்று பின்னிக் கிடக்கின்றன என்பதை உணராதவர்கள், மற்றவர், யாகம், யோகம் ஆகமம் தந்திரம் ஆகிய இவைகள் வேறு வேறு பண்பாட்டுக்குரியன எனக் கொள்பவர்கள்".

(பார்: கட்டுரை சங்கரரும் சமண மதமும்)

---

சமைக்கப்பட்டுள்ள பொங்கல்) பாவாடை போட்டு ஆராதனைகள் நடத்தி வழிபாடுகள்செய்து கொண்டார்கள். அஷ்டலக்ஷ்மி மண்டபத்தில்" கொலுவில் காட்சி அளித்து பக்தகோடிகளுக்கு அருள்பிரசாதம் வழங்கினார்கள்.

ஸ்ரீ. ல. ஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் அஷ்டாதசபுஜ துர்க்காதேவிக்கு விஷேச அபிஷேக ஆராதனைகள் நடத்தி தரிசனம் செய்து கொண்டு, சந்நிதியில் கோபூஜையுடன் 9 யானைகளுக்கு கஜபூஜை செய்து தரிசனம் செய்து கொண்டார்கள்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## THOUGHTS TO BE TREASURED

பெறுதற்கு அரிய பிறவியைப் பெற்றும்
பெறுதற்கு அரிய பிரான்அடி பேணார்.
பெறுதற்கு அரிய பிராணிகள் எல்லாம்
பெறுதற்கு அரியது ஓர்பேறு இழந்தாரே.

Even though they have been blessed with this human birth which is difficult of attainment, they revere not the Feet of the inestimable Lord. These creatures in unattainable (human) garb, they loose their rare (opportunity of) benefitting themselves (attaining salvation).

Hindu Organ

Friday, July 1, 1977.

## PETROL — NOW A MERE PITTANCE!

Mineral oils have become indispensable in the Modern World; so much so the ordinary man also has to depend on the supply of this most sought after commodity.

But strangely enough this universal need often is in short supply. Why and how this inconvenience is caused, no one can with certainty explain. In times of war such happenings may be traced to the strategy of depriving the enemy of vital supplies of fuel. But during other occasions which we call peace time any interference with the normal supply of petroleum, kerosine and other oils of that calibre would mean the dislocation of the daily routine of life in society.

We in this country are now experiencing a go-slow pattern of life that will eventually lead the society to a stage of artificial stand-still for no fault of the people. For the last two months the transport system here has become thoroughly undependable. Will the Mail Train or the Yarl Devi run today is the question that is often asked. Previously the query used to be 'will the Train run on time.'

To make confusion worse confounded the supply of petrol and kerosine has become a mystery. The public do not depend on the Railway or the C. T. B. for their travelling. The Hiring Car is part of the transport system. Again there is the owner of private cars to whom the motor vehicle is more important than his morning tea. What is the plight of those who depend on the motor vehicle for their transport. The driver and often the owner have to try queue after queue braving the sun and the showers spending hours waiting to be either favoured with a pittance of one gallon or to be refused even that bit.

Filling stations have become places of mental torture and physical strain unless they remain closed with the entertaining notice board — no petrol — placed at the entrance.

There is the cultivator who in the modern context of mechanical aids to agriculture has to earn his bread by the use of the mineral oil. To him also occurs the bafflement by a sudden stoppage — not short circuit — but short supply.

The house-holder who enjoys his electrical illumination off and on, is compelled to use his lantern in repair when the switches refuse to answer the demand.

And this is life. Is this not enough matter for our parliamentary candidates to make their orations?

## PARLIAMENTARY ELECTIONS – 1977

**Here are extracts from "Some Thoughts re Forthcoming Parliamentary Elections and the National Set-up" communicated to us by our veteran politican Shri S. Sivasubramaniam.**

( continued from 24-6-77 )

(5) All sections of the people of Ceylon of all communities, Sinhalese, Muslim and Tamil are suffering under the present Constitution.

(6) The term "Socialism" is an elusive one, as also the term "Democracy"; both are fraught with danger. The welfare of all, Sarvodaya, not what is termed as Democratic Socialism, ought to be the guiding principle of any Constitution or any Government in Sri Lanka.

(7) Religion should be given a foremost place; Religions of all denominations, to be treated alike —Apart from their intrinsic merit, all religions at their best contain guides for the highest forms of good Government and Social Justice and Social Welfare.

(8) The way of life and Standard of Living require radical changes if the country is to survive.

(9) A new economic system is urgently required.

(10) Statism or the omnipotent power of the State ought to be reduced to a minimum and the individual citizen of all communities, creeds, parties, sections and territorial regions in all parts of Sri Lanka be given the fullest opportunity for self development and for service to the country compatible with the safety and stability of the State.

(11) Equality of opportunity and status ought to be one of the cardinal principles of the Constitution and the entire national set-up; the principle of merit the sole guiding factor in all matters, subject to suitable adjustments for a period of transition, so as to achieve the dignity of human personality, the unity and cohesiveness of the State and inter-communal, inter-religious, inter-sectional, and inter-regional harmony, goodwill, co-operation and mutual assistances and freedom from external aggression.

(12) The principles of Peaceful Co-existence and non-confrontation should be applied in regard to relationship with the other countries of the World, as well as among the communities in Sri Lanka, and among the Tamil-speaking people themselves; the procedure of one section trying to impose its will on others is best eschewed, the spirit to agree to disagree fostered. Attempts at forced uniformity can never lead to real unity or unification whether it be by the bullet or the ballot or by any other forcible method.

(13) The country as a whole should be enabled to become self sufficient at least in Food Supply and gradually in other respects including necessities of life so as to become independent of external assistance or dependance.

(14) The personality cult of leaders should be eschewed for the purposes of permanent and real public welfare.

(15) The principle of Non-Alignment with the other countries followed, subject to requirements of the preservation of National Independence.

(16) Service not only to Sri Lanka but to the World should become one of the aims of the State and the Country and of individual citizens.

(17) Propaganda, oral and written, in Tamil, Sinhalese and English is a great desideratum.

(18) The moral co-operation of Non-Tamil Communities in Sri Lanka and the similar co-operation of other countries and international circles in the peaceful solution of our national affairs to be sought.

(19) The ideal of world union and universal welfare to be sought.

(20) The concurrent use of Tamil, Sinhala and English in all parts of Sri Lanka to be provided for on terms of equality for all purposes; the same procedure to be followed by the State for international purposes.

(21) A variation in the election of the President of the State is required.

(22) A variation in the selection of the Ministers as well as the Prime Minister is required.

(23) There should be two Houses of Parliament with balanced and supplementary Powers and there should be Joint Committees System with representatives from both Houses of Parliament.

(24) A Chapter of Fundamental Rights justiciable by Courts of Law is necessary.

(25) Such a Chapter on Fundamental Rights will be practically valueless unless accompanied by the creation of Judicial System, entirely independent of the Executive, owing its creation and existence not to any Minister or to the President but entirely to an autonomous Department of State selected by the Members of the Judiciary itself and by representatives of the Members of the Legal Professions, acting together as one single organization.

(26) The creation of a Public Service Commission, selected by selected representatives from Members of the Public Service, specifically for the purpose of such appointments, and for all matters whatsoever relating to all offices in the Public Service is required.

(27) A Chapter on Fundamental Duties both of the State and of the Citizen, justiciable by Courts of Law is necessary.

## OUR SOLAR SYSTEM

An outstanding development in the Solar system is predicted by Soviet Scientists.

The theory has been advanced that Jupiter is rapidly growing and will be reaching the mass and brightness of the sun in three billion years.

வான்முகில் வழாது பெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை அரசு செய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்க ளோங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலக மெல்லாம்

Printed and published by the Proprietors, the Saiva Paripalana Sabhai, Jaffna at their Saiva Prakasa Press, 450 K. K. S. Road Vannarponnai, Jaffna on Friday, July 1, 1977.

EDITOR-IN-CHIEF S. N. SIVAPIRAKASAM

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org